84. நற்றிணை, பரிபாடல், கம்ப ராமாயணம் ஆகிய இலக்கியங்களில் ஆங்கில மொழியாக்கம் கவிதை நடையிலேயே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

85. தமிழர் பண்பாடு, வரலாறு, இவற்றினை மேலும் அறிவதற்கு ஏற்றவகையில் பூம்புகார் கடல் அகழாய்வு, கோவாவில் உள்ள தேசிய ஆழ்கடல் ஆய்வு நிறுவனத்தின் ஒத்துழைப்போடு மூன்றாண்டு திட்டமாக செயற்படுத்த, வரும் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

86. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதற்கொப்ப உலகத்தின் பல பகுதிகளில் தமிழ்மொழி பேசுவோர் பரந்து காணப்பட்டாலும் தமிழை அவர்கள் சிறப்பான முறையில் பயிலுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். அவர்களிடம் ஆர்வத்தை நிறைவு செய்யும் வகையில் தமிழில் பாட நூல்கள் எளிய தமிழ் அகராதி—எளிய தமிழ் இலக்கணம் ஆகியவற்றைத் தமிழ் வல்லுநர்கள் ஒத்துழைப்புடன் வெளியிடுவதற்கும், தொன்மையான தமிழ்மொழி, தற்காலச் சமூகவியல், அறிவியல் வளர்ச்சி ஆகியவைகளுக்கேற்ப வளம் பெறுவதற்குரிய வழி, நிலைகள் மேற்கொள்ளப்பட்டு—உலகப் புகழ் பெற்ற நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து மலிவு விலையில் வெளியிடுவதற்கு சென்னையில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டத்தை தமிழ் இலக்கியம், கலை, மரபு, பண்பாட்டுக் கூறுகளை வளர்க்கும் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும்—அரசுக்கு கருத்துக் களைக் கூறி செயல்பட தமிழ் வல்லுநர்களைக் கொண்ட தமிழ் இயக்கக் குழு ஒன்று அமைக்கப்படும்.

87. நீண்டகாலக் கனவு நிறைவேறும் வகையில் நீலத்திரைக் கடலோரத்தில் நித்தம் தவம் புரியும் குமரி முனையில் உலகப் பொதுமறை தந்த வள்ளுவர்க்கு குறளின் அதிகாரங்களைக் குறிக்கும் வண்ணம் 133 அடி உயரமுள்ள மாபெரும் சிலையொன்று அமைக்கும் பணி இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதை உவகை பொங்கிடத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

பாவேந்தர்—அம்பேத்கார் நூற்றாண்டு விழாக்கள்.

88. இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என முரசு கொட்டி—பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்தது சிறுதையே வெளியில் வா என, இளைய தலைமுறைக்கு அழைப்பு விடுத்து எழுச்சியுற்ற பெண்கள் இந்த நாட்டின் கண்கள் என மகளிர் மாண்புறைத்து காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் அவன் காணத் தகுந்தது வறுமையா? எனப் பொங்கியெழுந்து புதியதோர் உலகு செய்வோம் எனப் புரட்சிச்குரல் ஓவித்து நம்மிடையே சிங்கமெனச் செம்மாந்து உலவிய பாவேந்தர்